**R 5407 (page 59)**

# வேறு எதை யேகோவா உன்னிடம் கேட்கின்றார்?

# WHAT DOTH JEHOVAH REQUIRE?

**ஆதார வசனங்கள்: மத்தேயு 7:24-29.**

மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார். – மீகா 6:8

தேவராஜ்யம் வரவிருக்கின்றது என்ற செய்திக்கு செவிசாய்ப்பது மட்டும் அவர்களுக்குப் போதாது, அந்த இராஜ்யம் உலகிற்கு நிச்சயமான ஆசீர்வாதங்களை கொடுக்கவிருக்கிறது என்பதையும் தம் வார்த்தைகளுக்கு செவிசாய்ப்போர் மனதில் பதியச்செய்ய இயேசு விரும்பினார். அந்த இராஜ்யத்தில் மேசியாவோடேகூட உடன் சுதந்திரராகும்படி இராஜ்யத்தின் வகுப்பார் உலகிலிருந்து அழைக்கப்படவேண்டும் என்று அவர்கள் அறிந்திருப்பது மட்டும் போதாது. தேவன் அவர்களுக்கு வழங்கியிருக்கிற மேலான சிலாக்கியத்தை அவர்கள் அடையவேண்டுமானால், அவர்களது தரப்பில் செயல்பாடு அவசியமானது.

‘‘கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி; நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன்’’ என்று பரிசுத்த யாக்கோபு தம் நிருபத்தில் எழுதியிருக்கிறார்(யாக்2:18). நம் கிரியைகளினால் இராஜ்யத்தை அடைகிறோம் என்பதல்ல, விழுகையினிமித்தம் அபூரணர்களாக இருக்கின்ற நம்மால், தேவன் அங்கீகரிக்கத்தக்கதாக பரிபூரணமான கிரியைகளை செய்ய இயலாதவர்களாயிருக்கிறோம். தேவனிடத்திலும் கர்த்தராகிய இயேசுவினிடத்திலுமான நம் விசுவாசமே, அதனை ஆதாயப்படுத்தும்பொழுது நமக்கு வெற்றியளிக்கும். ஆனால் தங்கள் முழு ஆற்றலைப் பிரயோகித்து பயத்தோடும் நடுக்கத்தோடும் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுபவர்களுக்கே வெற்றி சொந்தமாகும். அப்படிப்பட்டவர்களிடத்திலேயே தேவன் கிரியைசெய்து, கிறிஸ்துவின் மூலமாக அவர்களை ஜெயங்கொண்டோராகவும், முற்றிலும் ஜெயங்கொண்டோராக மாற்றுகிறார்.

இயேசு ஒரு எடுத்துக்காட்டை அல்லது உவமையை கொடுத்து, அதில்அவரது செய்திக்கு செவிசாய்த்து, அதற்கு கீழ்படிதலை காண்பித்தவர்களை ஞானமுள்ள மனுஷருக்கு ஒப்பாயிருப்பதாக அறிவித்தார். இவன் கற்பாறையின்மேல் தன் வீட்டைக் கட்டுகிறான். பெருமழை அவ்வீட்டின்மீதுபெய்தும், அதின் அஸ்திவாரத்தை அகற்றிப்போட முடியாதிருந்தது. வேறே எதுவும் அதற்கு பாதிப்பு அடையச் செய்யக் கூடாதிருந்தது. வாழ்க்கையில் புயல்கள் வருவது நிச்சயம். ஜீவியத்தில் பெரும் நெருக்கடியாக மரணம் வருவதும் நிச்சயம். கர்த்தருடைய ஏற்பாடுகளை ஏற்றுக்கொண்டிருந்து, இயேசுவின் அடிச்சுவடுகளில் தங்கள் சிறந்த ஆற்றலை வெளிப்படுத்தி நடந்துகொண்டிருப்பவர்கள், இந்த உபத்திரவங்களின் மத்தியிலும் அமைதலுடனும், நம்பிக்கையுடனும், பாதுகாப்புடனும் இருப்பார்கள். இவர்களுக்கு மரணம் என்பது முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் பூமிக்குரிய நிலைமையிலிருந்து பரத்துக்குரிய நிலைமைக்கு மாற்றமடைதலே ஆகும். ‘‘மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை.ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்’’ – 1கொரிந் 15:50,51. இவர்களுடைய விசுவாசமும் பற்றுறுதியும் தேவனுடைய வாக்குத்தத்தங்களின்மீது கட்டப்படுவதால், அவர்களை ஒருபோதும் தோல்வியுறச் செய்யாது. இப்படிப்பட்டவர்களுக்கு ஜீவ கிரீடம் வைக்கப்பட்டு, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளில் அதைத் தருவார் – 2தீமோ4:8.

மறுபுறம் இயேசுவின் வார்த்தைகளைக்கேட்ட அநேகர், அவற்றை பாராட்டினாலும், அதில் கொடுக்கப்பட்டுள்ள மகிமை நிறைந்த இராஜ்யத்தின் சிலாக்கியங்களை அடையும் முறையான படிகளை எடுக்கத்

தவறினர் என்று அவர் அறிவிக்கிறார். அவர்கள் தேவனிடத்தில் முழுதத்தம் செய்வதில் அல்லது அதை நிறைவேற்றுவதில் இருந்து தடைசெய்யப்படும்பொருட்டு, பரம்பரியம், பழக்கவழக்கம், சிற்றின்பம், சுகபோகம், உலகத்தின்ஆவி போன்றவற்றை அனுமதிப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் உண்மையில் ஒருபோதும் உணர்ந்துகொண்டிராத ராஜ்யத்தின் நம்பிக்கைகளில் ஓரளவு தங்களை உற்சாகப்படுத்திக் கொள்வார்கள். ஏனென்றால் அவர்கள் ஒருபோதும் முறையான படிகளை எடுக்கவில்லை. அவர்கள் முறையான அஸ்திவாரத்தின்மீது தங்கள் விசுவாசத்தைக் கட்டவில்லை, ஒருவேளை அவர்களில் சிலர் நியாயப்பிரமாணத்தின்மேல் கட்டப்பட்டிருந்து கிறிஸ்துவின் புண்ணியம் அருளப்படாமல், தங்களுடைய சொந்த முயற்சிகளால் தங்கள் தேவனுக்கு முன்பாக தகுதியுடையவர்கள் என்று எண்ணியிருக்கக்கூடும். இப்படிப்பட்டவர்கள் பெரும் தவறிழைத்தவர்களாவர். அவரது மரணம் நம் மீட்கும் விலையாக கொடுக்கப்பட்டு, உள்நோக்கமற்ற நம் மீறுதல்களுக்காக நமக்கு பரிந்துபேசுபவராக, மகிமையில் அவர் பிரவேசித்திருக்கிறார்.

அப்படிப்பட்டவர்கள் அனைவருக்கும் நெருக்கடியின் நாள், சோதனையின் நாள் நிச்சயமாக வந்துசேரும். அவர்களுடைய விசுவாசத்தின் கட்டமைப்பு முறையான அஸ்திவாரமின்றி இருப்பதால், அதைவிட்டுவிடுவர். அவர்களுடைய நம்பிக்கைகள் அனைத்தையும் இழந்து துன்பப்படுவார்கள். ஆயினும் நம்மில் எத்தனைபேர்அந்த வகுப்பாராக கருதப்படுகிறார்களோ, அவர்கள் நித்திய ஆக்கினைக்குச் செல்வார்கள் என்று இது குறித்துக்காட்டாது. கிறிஸ்தவ ஜனங்களில் கிட்டத்தட்ட அனைவரும் சந்தேகத்திற்கிடமின்றி, இருண்ட

**R5407 : page 60**

யுகங்களின் விசுவாசப் பிரமாணங்களால் தவறாக வழிநடத்தப்பட்டு, தேவவசனத்தில் இடம்பெற்றிராத அநேக காரியங்களை கற்றிருக்கின்றனர்.

## பரிசுத்த பவுலின் உவமையை ஒப்பிடுதல்

அப். பவுல் இதுபோன்ற எடுத்துக்காட்டைப் பயன்படுத்தி கூறுகிறார்; “போடப்பட்டிருக்கிற அஸ்திவாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திவாரத்தைப் போட ஒருவனாலும்கூடாது. அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாகக் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன்”. அவனவனுடைய வெளிப்பாடு வெளியாகும். நாளானது அதை விளங்கப் பண்ணும். அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். ஒருவன் அந்த அஸ்திவாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்களாகிய தெய்வீக சத்தியங்களைக் கொண்டு கட்டி, தெய்வீகத் தேவைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் இசைவாக தங்கள் விசுவாசத்தையும் குணாதிசயத்தையும் வளர்க்கிறவர்கள், இந்த யுகமுடிவில் வரவிருக்கும் உபத்திரவத்தின் நாளில் எந்த இழப்பையும் அடையமாட்டார்கள். ஆனால் மனித பாரம்பரியம் மற்றும் தன்னிறைவைக்கொண்டு, மரம் புல் வைக்கோலால் கட்டுபவர்களுடைய முழு விசுவாச அமைப்பும் எரிந்துபோவதைக் காண்பார்கள். ஏனெனில் அந்நாளின் அக்கினி ஒவ்வொரு மனிதனுடைய வேலைப்பாடு எத்தகையது என்று பரிசோதிக்கும்–1கொரிந்3:1015.

தங்களுடைய விசுவாச அமைப்பு அழிந்துபோவதால், அவர்கள் துன்புற்றாலும் , கிறிஸ்துவின்மேல் கட்டிருப்பார்களானால் அக்கினியில் அகப்பட்டபோதிலும் அவர்கள் இரட்சிப்படைவார்கள். அவரகள் வெளிப்படுத்தல் 7:14–17இல் விவரிக்கப்பட்டுள்ளபடி, உபத்திரவத்துக்குள்ளாகும் வகுப்பார் என்ற பதத்தில் சில சமயங்களில் பேசப்பட்டுள்ளனர். “இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள்

**R5408 : page 60**

அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்”. இவர்கள்மேல் பல்வேறு ஆசீர்வாதங்களை வழங்க தேவன் ஆயத்தப்படுத்தியிருக்கிறார். இவர்கள் தங்கள் கீழ்படிதல் , உண்மை, விசுவாசம் இவைகளின் விகிதாச்சாரத்துக்கேற்ப தேவனால்ஆசீர் அடைவர்.

பொன், வெள்ளி மற்றும் விலையேறப்பெற்ற கற்களைக்கொண்டு கட்டினவர்கள் என்று அப்போஸ்தலரால் குறிப்பிடப்பட்டோர், சிறுமந்தை வகுப்பாராக, ராஜரீக ஆசாரியக்கூட்டமாக, சிங்காசனத்தில் உட்காருவார்கள். இவர்கள் கிரீடங்களை அணிந்தவர்களாக, ராஜ்யத்தில் இயேசுவோடு உடன்சுதந்திரராயிருப்பர். ஆனால் கற்பாறையின்மேல் முறையான பொருட்களைக் கொண்டு கட்டாதவர்கள், அக்கினியால் காக்கப்பட்டபோதிலும் லேவியருக்கு நிஜமாயிருக்கிற திரள்கூட்டத்து வகுப்பாராவர். இவர்கள் சிங்காசனத்தில் அமர்வதற்கு பதிலாக, சிங்காசனத்தில் அமர்ந்திருப்பவர்களுக்கு முன்பாக ஊழியக்காரராக இருப்பார்கள். தலையில் கிரீடங்கள் அணிந்திருப்பதற்கு பதிலாக, குருத்தோலைகளை கையில் ஏந்துவதற்கு இவர்களுக்கு அளிக்கப்படும். இது தாழ்ந்தநிலையில் அடைந்த வெற்றியை சுட்டிக்காட்டுகிறது. ஆசாரிய வகுப்பார், தேவனுடைய நிஜமான

ஆலயமாக இருப்பர், லேவி வகுப்பாராகிய திரள்கூட்டமோ, தேவனுக்கும் ஆலய வகுப்பாருக்கும் ஊழியம் செய் வர்.

தேவன் தீர்மானித்திருக்கிற இரட்சிப்பு அனைத்தும் இத்துடன் முடிவடைவதில்லை, சுவிசேஷ யுகத்தில் இந்த இரண்டு வகுப்பார் மட்டுமே ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். முற்பிதாக்கள் இரட்சிக்கப்பட்டவர்களின் மற்றொரு வகுப்பாராக, பூமிக்குரிய பூரணத்துக்கு ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் பூமி முழுவதும் பிரபுக்களாக இருந்து, காணப்படாத பரலோக ராஜ்யத்தின் ஆவிக்குரிய வகுப்பாருக்கு, மகிமைநிறைந்த பிரதிநிதிகளாக இருப்பார்கள். இறுதியில், பூமிக்குரிய குடும்பங்கள் அனைத்தையும் ஆசீர்வதிக்கும் ஆயிரமாண்டு ஆளுகை நடைபெறும் அவ்வேளையில், யார் மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்து தங்களை தகுதியுள்ளோராக்குகிறார்களோ, அவர்கள் பாவம் மற்றும் சீரழிவிலிருந்து உயிர்த்தெழுதலில் படிப்படியாக உயர்த்தப்பட்டு, இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின்மூலம் மீட்கப்பட்டு, ஆதாமுக்குள் இழந்துபோன அனைத்தையும் திரும்பப் பெறுவார்கள். மற்றொருபுறம், தேவனையும் அவரது நீதியையும் மனதார எதிர்க்கின்ற புத்திக்கூர்மையுள்ள அனைவரும், குறிப்பிட்ட சில கால வாய்ப்புக்குப்பிறகு, இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். தற்போது நியாயத்தீர்ப்பில் இருக்கின்ற ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்ட வகுப்பாராகவோ, அல்லது மேசியாவின் 1000வருட ஆளுகையின்போது நியாயந்தீர்க்கப்படும் உலகின் ஜனங்களுக்குள்ளோ, யார் கீழ்ப்படிய மறுக்கிறார்களோ, துன்மார்க்கரான அவர்கள் அனைவரும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவர்.

## ஜனங்கள் ஆச்சரியப்பட்டனர்

பரிசுத்தஆவியின் ஆதிக்கத்தினால் ஒளியூட்டப்பட்டாலொழிய ஒருவரும் அவரது வார்த்தைகளை பூரணமாகப் புரிந்துகொள்ள முடியாது என்றாலும், அவர்கள் அபூரணத்தன்மையில், இயேசு பேசின அந்த போதனைகளைக்கேட்டு ஆச்சரியப்பட்டதில் ஐயமேதுமில்லை. இயேசு இன்னும் மகிமையடையாததால், அந்த பரிசுத்தஆவி இன்னும் அவ்வேளையில் அருளப்படாதிருந்தது(யோவா7:39). இயேசுவின் போதனைகள், வேதபாரகர்களின் பலதரப்பட்ட யூகங்கள் மற்றும் யோசனைகளிலிருந்து மாறுபட்டதாகவும், நேர்மறையான தன்மையையும் உடையதாயிருந்தன. அவ்வாறே சத்தியத்தின் விஷயத்திலும் எப்பொழுதும் இருக்கிறது. எங்கு குழப்பமும், தியானம் செய்வதால் பரம்பொருளை அடையலாம் என்ற நம்பிக்கை உள்ளதோ, அங்கே தப்பறையும் அறியாமையும் இருக்கும் என்று நாம் நிச்சயிக்கலாம். இதன் காரணமாக, கிறிஸ்துவைப் பிரசங்கிப்போர் அனைவரும் போதிப்பதற்கு அபிஷேகம் அல்லது நியமனம் பெற்றிருக்கவேண்டியது அவசியமாகிறது. இதனை பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பித்தலின்மூலம் தேவனால் மட்டுமே தரமுடியும்.

## நமது திறவுகோல் வசனம்

“மனுஷனே நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார். நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல், வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்?” ஆனால் ராஜ்யத்தின் சுதந்தரவாளியாக வேண்டுமானால், ஒருவர் தன்னையே வெறுத்து, தன் சிலுவையை சுமந்துகொண்டு, இயேசுவின் அடிச்சுவடுகளை சுயபலிசெலுத்தி பின்பற்றவேண்டும் என்று இந்த திறவுகோல் வசனத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை என்றும், ஏன் இந்த வித்தியாசம் என ஆரம்பத்தில் ஒருவர் ஒருவேளை கேட்கக்கூடும்.

ஆம் இது உண்மையே; எதைக் கேட்கிறார் என்பது முதலாவதானது. ஆனால் மற்றொன்று அது சிலாக்கியம் ஆகும். தேவன் பலியைக் கேட்பதில்லை. அவர் எதிர்பார்ப்பதெல்லாம் உண்மையையும் கீழ்ப்படிதலையுமே, பலியையல்ல. எது பலியிடப்பட்டாலும் அது தெய்வீகப் பிரமாணத்தின் தேவையைக் காட்டிலும் மிக கூடுதலானது. இயேசுவின் விஷயத்திலும் அவ்வாறே நடந்தது. தெய்வீகப் பிரமாணமானது அவரை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் தேவனை நேசிப்பதும், தன் அயலானை தன்னைப்போல் நேசிக்கவுமான கீழ்ப்படிதலைக் காட்டிலும் அதிகமாக அவரிடத்தில் எதிர்பார்க்கவில்லை. ஆனால் தம் ஜீவனைக் கையளிப்பதைத்தவிர இயேசுவால் நிச்சயமாக இவையனைத்தையும் செய்து முடித்திருக்கமுடியாது. இதன் காரணமாகவே யோர்தானில் இயேசு தம்மை ஒப்புக்கொடுத்தபொழுது, வெறுமனே நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க அல்ல, பிதாவின் சித்தம் செய்வதற்காக தம்மிடமுள்ள அனைத்தையும் மரணபரியந்தம் அர்ப்பணித்தார். நியாயப்பிரமாணத்தில் தேவனுடைய கோரிக்கைக்கும்

கூடுதலாக, பிதாவின் சித்தம்செய் ய அவர் பெருமகிழ்ச்சியாயிருந்தார்(எபி10:5–7). அதுபோலவே, அவரோடுகூட மகிமை கனம் சாவாமையை பரலோக நிலைமையில் பெறப்போகிற அவருடைய பின்னடியார்கள் அனைவரிடையேயும் காணப்படவேண்டும்.

யூதர்களுக்கு மீகா தீர்க்கதரிசி எழுதுகையில், நியாயப்பிரமாணத்தின் நிலைப்பாட்டின்படியே அவரது செய்தி கொடுக்கப்பட்டது. நியாயப்பிரமாணத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தங்களது மிகச்சிறந்த ஆற்றலை வெளிப்படுத்தவேண்டுமென்று யூதர்களை உற்சாகப்படுத்தினார். இருந்தபோதிலும், இயேசுவைத்தவிர, எந்த யூதனாலும் ஒருபோதும் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற முடியவில்லை என்று நாம் அறிவோம். ஏனென்றால் அவரைத்தவிர மற்ற எல்லோரும் விழுந்துபோனவர்களாக, அபூரணர்களாக இருந்தனர். அவர்மட்டுமே, "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய்" இருந்தார்.

மேசியாவின் ஆயிரவருடஆளுகையின்போது, தேவனால் மோசேயின் மூலமாக யூதர்களுக்கு கொடுக்கப்பட்ட இதே பிரமாணம், மேசியாவின்மூலம் முழு உலக மனுக்குலத்திற்கும் கொடுக்கப்படும். அதன் கோரிக்கைகள், நியாயமாய் நடந்து, இரக்கத்தை சிநேகித்து, தேவனோடு மனத்தாழ்மையாய் நடப்பதாகும். யாரையும் பரிபூரணத்துக்கு கொண்டுவருவதைக் குறித்து கவனிக்கும்போது, இப்பிரமாணத்துக்கான இயேசுவின் ஊழியம் வெற்றிகரமாய் அமையப்போகிறது, அதேசமயம் இதற்கான மோசேயின் ஊழியம் தோல்வியுற்றது என்பதற்கான காரணம் என்னவெனில், மேசியாவின் இராஜ்யம் பாவிகளை மன்னிக்கும் அதிகாரம் பெற்றதாயும், அவர்களது அபூரணங்களிலிருந்து வெளியேவர அவர்களுக்கு உதவிசெய்து, ஆதி தகப்பனாகிய ஆதாமின் பூரண நிலையாகிய தேவசாயலுக்கும் தேவரூபத்துக்கும் திரும்பச் செல்வதற்கு ஏதுவாக, முழுமையாக ஆயத்தமாகியிருக்கும்.

மேசியாவின் ஆயிரவருடஆளுகையின்போது, தேவனால் மோசேயின் மூலமாக யூதர்களுக்கு கொடுக்கப்பட்ட இதே பிரமாணம், மேசியாவின்மூலம் முழு உலக மனுக்குலத்திற்கும் கொடுக்கப்படும். அதன் கோரிக்கைகள், நியாயமாய் நடந்து, இரக்கத்தை சிநேகித்து, தேவனோடு மனத்தாழ்மையாய் நடப்பதாகும். யாரையும் பரிபூரணத்துக்கு கொண்டுவருவதைக் குறித்து கவனிக்கும்போது, இப்பிரமாணத்துக்கான இயேசுவின் ஊழியம் வெற்றிகரமாய் அமையப்போகிறது, அதேசமயம் இதற்கான மோசேயின் ஊழியம் தோல்வியுற்றது என்பதற்கான காரணம் என்னவெனில், மேசியாவின் இராஜ்யம் பாவிகளை மன்னிக்கும் அதிகாரம் பெற்றதாயும், அவர்களது அபூரணங்களிலிருந்து வெளியேவர அவர்களுக்கு உதவிசெய் து, ஆதி தகப்பனாகிய ஆதாமின் பூரண நிலையாகிய தேவசாயலுக்கும் தேவரூபத்துக்கும் திரும்பச் செல்வதற்கு ஏதுவாக, முழுமையாக ஆயத்தமாகியிருக்கும்.

நாங்கள் ஏங்கித் தவிக்கிறோம், தவிக்கிறோம்,
உம் மகிமையைக் காண்பதற்கே – அது
பூமியெங்கும் விசாலமாய்ப் பாய்ந்தோடுமே...
பழையதும் முதுமையாய்ப்போன தவறுகள் அனைத்தும்
புதியவை பிறக்க வழிவிட்டு, எல்லை தாண்டி ஓடிப்போம்.
இந்த மகிமையின் உச்சநிலையை எட்ட
சீயோன் நீண்ட நாள் காத்திருப்பதில்லை;
அவள் அரியணை ஏறுதல் விரைவில்நிகழும்,
இதோ அவளது ராஜா வாசலருகே நிற்கிறார்".

---

See more Books & Articles at www.foodfornewcreature.com